**O.S.No. 232/2013**

**DW1 : கே.பி.ரமேஷ்** தேதி 24.07.2025

பிவாசா 1 சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 10 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து என் தாய் வழி தந்தை சீரங்ககவுண்டர் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். என்னுடைய தாயாருக்கு அவருடைய தகப்பனார் இரண்டு தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மற்றொரு மகளான என் சித்தி சரஸ்வதிக்கு ஒரு தான செட்டில்மென்ட் பத்திரமும் ஒரு கிரைய பத்திரமும் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் தான செட்டில்மென்ட் பத்திரம் மட்டும் எழுதி கொடுத்துள்ளார். கிரைய பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. நானும் என் சகோதரனும் சேர்ந்து என் தாத்தா சீரங்ககவுண்டரின் 18 சென்ட் நிலத்தை கூட்டாக கிரையம் வாங்கியிருக்கிறோம் என்றால் சரிதான். நானும், என் சகோதரர் மற்றும் என் தாயாரும் சேர்ந்து முதன்மை மாவட்ட நீதிமன்றம் ஈரோடு அ வ எண். 18/2013 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கை இவ்வழக்கின் 7, 8, 9 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருந்தோம். இந்த வழக்கில் வாதி 180/2 ஏ மற்றும் 180/2 சி ல் 44 ½ சென்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1978 ல் பழனிசாமி என்பவர் என்னுடைய தாத்தா சீரங்ககவுண்டர் மீது கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. என் தாய் மாமா தங்கவேல், என் தாய் மற்றும் என் சகோதரி அவர்கள் தகப்பனார் மீது பாகப்பிரிவினை கோரி அ வ எண். 621/1991 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. அ வ எண். 621/1991 எனக்கு தெரியும் என்றும் தற்போது தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு ஒரு தலை பட்ச தீர்ப்பாகியுள்ளது என்றால் அது எனக்கு

தெரியாது. அந்த தீர்ப்பாணையின் பெயரில் EP 139/2005 நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதில் தங்கவேலுக்கு ச எண்.189/1 மற்றும் ச எண்.189/2 ல் பங்கு தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அதன் சரியான ரீ ச எண் 180/1 ஏ மற்றும் 1 பி, மற்றும் 180/2 ஏ, 2 பி, 2 சி என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் ரீ.ச.எண்.189 எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 10 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய 44 ½ சென்டில் கிரையம் வாங்கிய தேதியில் இருந்து அவர் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அ வ எண்.621/1991 அதில் தங்கவேலுக்கு தீர்ப்பான சொத்தை தான் 10 ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 10 ம் பிரதிவாதி நல்ல எண்ண கிரையதாரர் என்றும் இந்த வழக்கில் அக்கிரையம் அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. 10 ம் பிரதிவாதி வாங்கிய கிரைய பத்திரம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. 10 ம் பிரதிவாதியை ஏமாற்றும் எண்ணத்தில் நானும் வாதிகளும் வஞ்சக கூடடாக சேர்ந்து செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல.